வேண்டுமென்றார், அதற்கு நேரம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அவர் எழுப்ப அனுமதிக்கிறோம். அமைச்சர் பதில் அளிக்கிறார், எல்லாம் நடந்துகொண்டுதான் இருக்கிறது.

6. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். திரு. சஞ்சய் ராமசாமி, பொதுக் கணக்குக் குழுவின் தலைவர்.

திரு. சஞ்சய் ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1995-96-ஆம் ஆண்டிற்கான பொதுக்கணக்குக் குழுவின் 242 முதல் 282-வது அறிக்கை வரையிலான 41 அறிக்கைகளை இப்பேரவைக்கு அளிக்கிறேன். இந்த அறிக்கைகளை அச்சிட்டுப் பேரவையில் அளிப்பதற்கு போதிய கால அவகாசம் இல்லாததால், இவ்வறிக்கைகளின் படியெடுத்த நகல்கள், டம்மி ரிப்போர்ட்ஸ் சட்டமன்ற நூலகத்தில் உறுப்பினர்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன. இவ்வறிக்கைகள் அச்சிடப்பட்டு கிடைக்கப் பெற்றவுடன் உறுப்பினர்களுக்கு தனியாக அனுப்பி வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஓராண்டு காலத்தில், பொதுக் கணக்குக் குழு நன்றாக செயல்பட வேண்டும் என்பதற்காக தாங்களும், மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களும் எல்லா வசதிகளையும் செய்து கொடுத்ததற்காக எங்களுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதுமட்டுமல்ல, இங்கே தமிழ்நாடு சட்டமன்ற பொதுக் கணக்குக் குழுவிற்கு உறுதுணையாக இருந்து எல்லா வசதிகளையும் செய்து கொடுத்த சட்டமன்றப் பேரவைச் செயலாளர் அவர்களுக்கும், மற்ற அதிகாரிகளுக்கும் குழுவின் சார்பாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. ஆர். சிங்காரம், அரசு உறுதி மொழிக் குழுவின் தலைவர்.